MR. SPEAKER : I have no objection if the Hon. Minister is prepared to answer that question. But I do not think it arises from the main question.

THE HON. SRI M. A. MANICKAVELU : I bow to the ruling of the Hon. Speaker. (Laughter.)

Village chavadies

* 451 *Q.*—SRI S. LAZAR (on behalf of Sri V. Arunachala Thevar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many public buildings (village chavadies) are there in the Pudukkottai division in all the three taluks; and

(*b*) how many of them are in a dilapidated condition?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 82.

(*b*) 14.

SRI S. LAZAR : இந்த பாழடைந்த சாவடிகளைத் திரும்ப அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மிகவும் பாழடைந்த சில சாவடிகளை ரிப்பேர் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். சில சாவடிகள் ரொம்ப மோசமான நிலைமையில் இருப்பதால், அவைகள் புதியதாகக் கட்டப்படும்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* THE DEATH OF ONE ARUMUGHAM IN POLICE CUSTODY AT KODAMBAKKAM.

MR. SPEAKER : The hon. Member Sri K. Vinayakam has given notice of a motion under Rule 40, to call the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the death of Arumugham in the Police Station at Kodambakkam. I think the matter is under enquiry. So, I would request the hon. Member to be careful in what he wishes to say. I request him to be discreet.

9-30 a.m. SRI K VINAYAKAM : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் இப்போது விசாரணையில் இருக்கிறது என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த விசாரணையை பாதிக்கும் அளவுக்கு நான் எதுவும் சொல்லமாட்டேன். அதேமாதிரி அமைச்சர் அவர்களும் இந்த விசாரணையை பாதிக்கும் அளவிற்கு எதுவும் சொல்வார் என்று எதிர் பார்க்கவில்லை. இந்த சம்பவம் நடந்த தொகுதியைச் சேர்ந்தவன் நான். அந்தத் தொகுதியில் இப்பேர்பட்ட மரணம் ஏற்பட்டது ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. பத்திரிகைகளில் இதைப்பற்றி அதிகமாக வருவது இன்னும் பரபரப்பக் காரணம். இது ஒரு பெரிய அதிர்ச்சியை—பரபரப்பை—உண்டாக்கியிருக்கிறது. இந்த வாலிபன் செய்த குற்றம் என்னவென்று சொல்லப்படுகிறதென்றால்—பத்திரிகைகளிலிருந்து பார்க்கிறோம்—ஏதோ ஒன்றிரண்டு சாமான்களைத் திருடினான் என்று சொல்லி, அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டு இறந்து போயிருக்கிறான். அவன் இறந்ததற்குக் காரணம் தெரியாது. ஒரு சிலர் போலீஸார் அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். போலீஸ்

தரப்பிலிருந்து காக்காய் வலிப்பு வந்து இறந்து போனதாகச் சொல்லப்படுகிறது. இதில் எது உண்மை என்பது இப்போது நடக்கும் விசாரணையிலிருந்து வெளிப்படும். ஆனால், இப்போது விசாரணை நடக்கும்போது அரசாங்கம் செய்யவேண்டிய கடமையைச் செய்தார்களா என்பதைப்பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு இரண்டு ஸப்-இன்ஸ்பெக்டர்களும், இரண்டு கான்ஸ்டேபிள்களும் பொறுப்பு என்று சூசகமாகத் தெரியும்போது, அரசாங்கம் செய்யவேண்டிய கடமை என்னவென்றால், அவர்களை வேலையிலிருந்து தாற்காலிகமாக நீக்கி வைத்து விசாரணை நடத்தவேண்டும். விசாரணை முடிந்து அவர்கள் செய்யவில்லை என்று நிரூபிக்கப்படலாம். அப்போது அவர்களைத் திரும்ப வேலைக்கு வைத்துக் கொள்வதில் தப்பில்லை.

அந்த வாலிபன் இறந்து பரபரப்பு ஏற்பட்டு அமைதி குலைந்திருந்த அன்று இரவு 2,000 பேர்—பொதுமக்கள்—ஒன்றாகக் கூடி, எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் போலீஸ் ஸ்டேஷன்மீது படையெடுத்து, கற்களை எடுத்து வாரி வீசினர். இது நம் நாட்டிலேயே நடக்காத ஒரு சம்பவம். ஒருவர் இறந்து போனார் என்றால் 2,000 பேர்கள் ஒன்றுகூட வேண்டுமென்றால் என்ன காரணம்? பல பேர்கள் இறந்து போகிறார்கள், அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. இந்த ஆறுமுகத்தின் பெயர் தினந்தோறும் பத்திரிகைகளின் வருகின்றதன் மர்மம் என்ன? இதை அரசாங்கம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். 2,000 பொது மக்கள் எல்லோரும்—அந்த ஊரார் அல்ல—எல்லோரும் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி கற்களை வீசித் தொல்லை கொடுத்தார்கள். நான் இதைக் கேள்விப்பட்டு அமைச்சர் அவர்களுக்கு டெலிபோன் செய்தேன். போலீஸ் கமிஷனர் அவர்களுக்கும் டெலிபோன் செய்தேன். ஸீரியஸ் ஸிடுவேஷன் உண்டாகி யிருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன். அமைச்சர் உடனே நடவடிக்கை எடுத்தார். அதை நான் பாராட்டுகிறேன். விசாரணை செய்யும்படி உத்திரவிடவும் தவறி விடவில்லை. விசாரணைக்கு உத்திரவு போட்டார். பிரேதத்தைத் திரும்பப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லி இன்னொரு டாக்டருக்கு அனுப்பப்பட்டது. இப்போது விசாரணை நடக்கிறது. அரசாங்கம் நேர்மையாக நடந்திருக்கிறது. இதற்கு சம்பந்தம் என்று சொல்லப்படுகிற இரண்டு ஸப்-இன்ஸ்பெக்டர்களிடமும் போலீஸ்காரர்களிடமும் எனக்கு தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. அவர்களை எனக்குத் தெரியவும் தெரியாது. நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதும் கிடையாது. லைஸென்ஸ் விஷயமாகக்கூடப் போகாதவன் நான். அவர்களை தாற்காலிகமாக நீக்கிவிட்டு—வேலையிலிருந்து நீக்கிவிட்டு—விசாரணை நடத்தவேண்டும். இப்போது விசாரணை நடக்கும்போது, காக்கி உடையில் காலையிலும் மாலையிலும், வேலை இல்லாத நேரத்தில் மோட்டார்பைக்கில் போய் சாட்சிகளைக் கலைப்பது, தனக்குச் சாதகமாக சாட்சிகளை உண்டாக்குவது, இந்தமாதிரியான நிலைமை நடக்கிறது. நான் அந்தத் தொகுதியின் சட்ட சபை அங்கத்தினர் என்ற ஹோதாவில் எடுத்துச் சொன்னேன். இது சட்ட சபைக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் வந்த பிறகு எடுத்துச் சொல்லாமல் பூசிவிட்டு உட்கார்ந்தால் I am not doing justice as a legislator of that Division.

ஆதலாலே, ஏதாவது பாதிக்கப்படும் என்று அமைச்சர் நினைத்தால், அவர் சொல்லக்கூடாததை அவர் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் உண்மையைத் தெரிந்துகொள்ளும் வரையில் அவர்களை ஏன் தாற்காலிகமாக நீக்கிவைக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, 40-வது விதியின்கீழ் ஒரு சம்பவத்தைப்பற்றி ஒரு ஸ்டேட்மெண்டை எதிர்பார்த்துத்தான் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. கனம்

அங்கத்தினர் அவர்கள் யோசனையெல்லாம் சொன்னார்கள். அரசாங்கம் சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். இம்மாதிரி இப்போது விசாரணை நடைபெறுவதைப்பற்றித் தாங்களே குறிப்பிட்டீர்கள். இம்மாதிரி விசாரணை நடத்துவது புதிதல்ல. இரண்டு தினங்களுக்கு முன்புகூட நான் ஒரு தகவல் தெரிந்துகொண்டேன். இந்தமாதிரியான சம்பவம்பற்றி புகார் ஏற்பட்டால் உடனே அதன்மீது விசாரணை நடக்கிறது. இதுமட்டும் பத்திரிகைகளில் அதிகமாக வருகிறதென்றால் அதற்கு நான் காரணமல்ல; சம்பவமும் காரணமல்ல. சில தினங்களுக்கு முன்பு ஒரு சம்பவம் சம்பந்தமாக பகிரங்க விசாரணை நடந்தது. சில பேர்கள் புகார் செய்ததன்பேரில், விசாரணை செய்யவேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்ததன்பேரில், போலீஸார் விசாரணைக்கு ஏற்பாடுசெய்து, விசாரணை ரிப்போர்ட் வந்த பிறகு கேஸ் போட்டு, பிராசிக்யூஷன் செய்து—ஹெட்கான்ஸ்டேபிள் தவறுதல் இல்லை என்று அக்விட் ஆகி, இரண்டு பேருக்கு 10 ரூபாய் அபராதம் மட்டும் போட்டார்கள். அபராதம் போதாது மேல்நடவடிக்கைகள் என்ன எடுக்கவேண்டுமென்று விவரங்களைப் பார்த்தேன். இந்தமாதிரிப் புகார்கள் புதிதல்ல. இதில் விபரீதம் ஒன்றுமில்லை. இந்தமாதிரியான சம்பவம் எப்போதாவது போலீஸார் கவனத்திற்கு வந்தால், அரசாங்கத்தின் தலையீடு இல்லாமலேயே, போலீஸாரே ஆடொமாடிக்காகச் செய்கிறார்கள் என்று நான் சொன்னேன். விசாரணை நடக்கும்போது அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுப்பது—மாற்றுவதா, ஸஸ்பெண்ட் செய்வதா—என்பதெல்லாம் விசாரணையிலிருந்து வெளிப்படும் உண்மையைப் பொருத்தது. அரசாங்கம் பார்த்துத்தான் செய்யும். சில நாட்களுக்கு முன்பு இதைப் பற்றிக்கூட நான் குறிப்பிட்டேன். இப்போது ஸ்டேட்மெண்ட் என்று கேட்பதால், இந்த ஸ்டேட்மெண்டை நான் சமர்ப்பிக்கிறேன்.

On the night of 20th February 1958, one Arumugham and another person named Mathurai were brought to the Kodambakkam Police station for investigation in a theft case. There is nothing on record to show that the two persons were formally arrested. Arumugham died the same night while he was in the Police Station. An inquest was held in the morning of 21st February 1958 by the Sixth Presidency Magistrate. At the inquest several injuries were found on the body of the deceased. The panchayatdars were of opinion that death was due to epileptic fits, and that while the deceased was being interrogated, he should have fallen down on account of the fits and died. The body was sent for post-mortem examination the same day. After the autopsy, the body was handed over to the mother of the deceased for cremation.

According to Police Standing Order 157, all cases of death in police custody occurring within the limits of Madras City should be inquired into by a Presidency Magistrate; in view of this and also in view of the fact that the mother of the deceased and some others had submitted a petition to the Commissioner of Police alleging that Arumugham was beaten to death in the police station, the Chief Presidency Magistrate ordered the Fifth Presidency Magistrate to conduct the enquiry under Police Standing Order 157. The enquiry is now going on.

28th March 1958] [Sri M. Bhaktavatsalam]

The next day, i.e., on 22nd February 1958, there was rioting near the Kodambakkam Police Station. At about 6-30 p.m. on that day a crowd collected at the rear of the Kodambakkam Police Station, armed with sticks and stones and advanced towards the police station, alleging that Mathurai had also been beaten to death and buried in the backyard of the station. The Assistant Commissioner of Police, Southern Range, who was at the station warned the crowd and asked the persons to disperse. Repeated warnings had no effect and the crowd which was then about 300 strong advanced towards the station, pelting stones at the station from the rear. The Sub-Inspector and eight other men were injured. Soon the crowd swelled to about 600 persons. After repeated warnings, a lathi charge was made to disperse the crowd. This had the desired effect and the crowd dispersed.

During the course of the rioting the Sub-Inspector of Police, 13 constables and five private individuals received stone hits. The injuries are reported to be simple. A case of rioting, etc., has been registered against seven persons and the case is under investigation.

III.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1958 (L.A. BILL NO. 13 OF 1958) [a].

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I move—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1958 (L.A. Bill No. 13 of 1958), be taken into consideration.'

கனம் சபாநாயகர் அவர்களே, இதைப்பற்றி நேற்று விவாதம் செய்து, வோட்டும் எடுக்கப்பட்டு, அந்த அடிப்படையில் தான் இந்த மசோதாவும் இந்த சபையினுடைய பரிசீலனைக்கு வருகிறது. ஆகவே இதைப்பற்றி அதிகம் விவாதம் செய்யவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஏதாவது விஷயங்களை அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்ல விரும்பினால், அதற்குத் தடையாக நான் நிற்க விரும்பவில்லை. நேற்று நடந்த விவாதத்திற்குப் பிற்பாடு இப்பொழுது விரிவான விவாதம் அவசியமில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1958 (L.A. Bill No. 13 of 1958) be taken into consideration.'

The Motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 27th March 1958.